# DEPOSITION OF WITNESS.

## IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, SIVAGANGAI

Spl.SC.No. 09/2017

PROSECUTION WITNESS No - PW- 21

| | | | |
|---|---|---|---|
| Name : | மருத்துவர்.கண்ணன் | Caste: | |
| Father Name | | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 21th day of July 2025.

1வது மற்றும் 3வது எதிரிகள் நீதிமன்றத்தில் நேரில் ஆஜர். 2வது எதிரி நீதிமன்றத்தில் நேரில் ஆஜரில்லை. அவருக்காக மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>முதல் விசாரணை :</u>**

1) நான் தற்போது சிவகங்கை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் உதவி பேராசிரியராக பணியாற்றி வருகிறேன். கடந்த 2015-ம் வருடம் திருமயம் அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணியிலிருந்தபோது கடந்த 26.02.2015-ம் தேதி மதியம் 3.00 மணியளவில் கிருஷ்ணமூர்த்தி வயது 45 என்பவருடைய பிரேதத்தை பிணக் கூறாய்வு செய்வதற்காக காரைக்குடி இருப்புப்பாதை காவல்நிலைய குற்றஎண்.19/2015 வழக்கின் விசாரணை அதிகாரியான இருப்புப்பாதை ஆய்வாளர் கொடுத்த வேண்டுகோள் கடிதம் பெற்று மேற்குறிப்பிட்ட நபரை பரிசோதித்த போது வெளிப்புற காயங்களான சிராய்ப்புக்காயம் 10X5செமீ அளவில் இடது தொடையில் காணப்பட்டது. வெட்டுக்காயமாக 10x2செமீ அளவில் இடது கண்ணத்தில் காணப்பட்டது. சிராய்ப்புக்காயம் 6X3செமீ அளவில் இடது புஜத்திலும், 9X5செமீ அளவில் இடது முழங்கையிலும் காணப்பட்டது. இடது பக்க தலை எலும்பு அழுத்தப்பட்டு உடைந்த நிலையில் காணப்பட்டது. மேலும் ஊள்புற சோதனையின் போது இடது பக்க முழங்கை மற்றும் இடது பக்க மணிக்கட்டில் எலும்பு முறிவு காணப்பட்டது. மேலும் இடது பக்க எலும்பு முறிவு தலையில் காணப்பட்டது. மூளையின் இடது பக்க பகுதிகள் முற்றிலும் காணப்படவில்லை. மேலும் மேற்குறிப்பிட்ட நபர் இரயில் விபத்தில் இறந்தாரா அல்லது பிற நபர்கள் தாக்கிய காயங்களால் இறந்தாரா விளக்குமாறு என்னிடம் கருத்து கேட்கப்பட்ட போது மேற்கூறிய நபருக்கு ஏற்பட்ட காயங்கள் இரயிலில் அடிபட்டு ஏற்படுவதால் நிகழ்ந்திருக்கலாம் அல்லது தனி நபர்கள் ஆயுதங்களால் தாக்கியதாலும் நிகழ்ந்திருக்கலாம் என்று நான் கருத்துரை வழங்கினேன். மேற்குறிப்பிட் நபருக்கான இறப்பு கம்பியால் அடித்தால் தலைக்காயம்

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2025.07.21 17:29:17 +0530

ஏற்பட்டு இறந்திருக்க வாய்ப்புண்டா என்று காவல்துறையினர் கேட்ட கேள்விக்கு அவ்வாறு ஏற்பட்டிருக்கலாம் என்று கருத்துரை வழங்கினேன். மேற்படி நபருக்கு மூச்சு திணறல் ஏற்பட்டு அதனாலும் இறந்திருக்கலாமா என்று காவல்துறையினர் கேட்டபோது சிலரால் அவருக்கு மூச்சு திணறலை ஏற்படுத்தும் நிகழ்வை செய்திருந்தால் அவருக்கு இறப்பு ஏற்பட வாய்ப்புண்டு என கருத்துரை வழங்கினேன். மேலும் காயங்களின் தன்மை இறப்பிற்கு முன்பு ஏற்பட்டதா பின்பு ஏற்பட்டதா என்பதை என்னால் வேறுபடுத்த இயலவில்லை என்றும் காவல்துறையினரிடம் தெரிவித்தேன். மேற்படி பிரேத பரிசோதனைக்கு இருப்புப்பாதை சிறப்பு சார்பு ஆய்வாளர் கொடுத்த வேண்டுகோள் கடிதம் **அ.சா.ஆ. 10** ஆக குறியீடு செய்யப்படுகிறது. படிவம் 86 **அ.சா.ஆ.11** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் வழங்கிய பிரேத பரிசோதனை அறிக்கை **அ.சா.ஆ.12** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது குறித்து காவல்துறையினர் என்னிடம் கோரிய சந்தேகங்கள் அடங்கிய வினாவிற்கு நான் வழங்கிய கருத்துருவுடன் கூடிய பதில் **அ.சா.ஆ. 13** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது குறித்து காவல்துறை இருப்புப்பாதை சார்புஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**1வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

நான் பிரேத பரிசோதனை செய்த நபருக்கு ஏற்பட்டிருந்த காயமானது அந்த நபர் இரயிலில் அடிபட்டிருக்கும் பட்சத்தில் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்புள்ளது. ஆய்வாளர் ஆயுதங்கள் எதையும் காட்டி என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.

**2வது மற்றும் 3வது எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

இந்த வழக்கு தொடர்பாக விசாரணை அலுவலர் என்னை எத்தனை முறை விசாரித்தார் என்றால் ஒரு முறை விசாரித்தார். விசாரணை அலுவலர் என்னை இரண்டு முறை விசாரித்ததாக சொன்னால் அது தவறு. நான் முதலில் வழங்கிய பிரேதபரிசோரனையில் மூச்சு திணறல் ஏற்பட்டு இறந்ததாக நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அ.சா.ஆ.13 ஆவணமானது என்னால் எழுதப்பட்டதா என்று சொன்னால் ஆம் நான் தான் என் கைப்பட எழுதினேன். போலீசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க நான் அவ்வாறு எழுதிக் கொடுத்தேன் என்றால் சரியல்ல.

அ.சா.ஆ.13ல் உள்ள வாசகங்கள் அனைத்தும் காவல்துறையினர் சொல்லி நான் எழுதியது என்றால் சரியல்ல.

**மறு விசாரணை**. இல்லை

சாட்சி கூறியதை என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டி, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2025.07.21 17:29:22 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
சிவகங்கை